**செய்தி வெளியீடு எண்: 174** **நாள்: 03.03.2020**

**<u>இன்று (3.3.2020) சென்னையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத் துவக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் சிறப்பான தலைமை உரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு டி. ஜெயக்குமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே சிறப்பான முன்னிலை உரை ஆற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் திரு க. சண்முகம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்களே!

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்களே!

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என். நடராஜன் அவர்களே!

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்களே!

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி அவர்களே!

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களே!

மாண்புமிகு புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி மற்றும் முன்னாள் அமைச்சர் திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்களே!

World Bank Country Director for India Respected Mr. Junaid Kamal Ahmad!

World Bank Task Team Leader Dr. Rifat Hasan!

மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மரியாதைக்குரிய நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே!

மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அப்போலோ நிர்வாக இயக்குநர் மரியாதைக்குரிய டாக்டர் பிரதாப் ரெட்டி அவர்களே!

டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக்கழக வேந்தர், புதிய நீதிக் கட்சியின் தலைவர் திரு.ஏ.சி.சண்முகம் அவர்களே!

சவிதா பல்கலைக்கழக வேந்தர் மரியாதைக்குரிய திரு.வீரையன் அவர்களே!

வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் மரியாதைக்குரிய திரு.ஐசரி கணேஷ் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களே மற்றும் அனைத்து மருத்துவ நிபுணர்களே!

வருகை தந்திருக்கின்ற முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத் துவக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீடித்து நிலைக்கக்கூடிய வளர்ச்சி குறியீடுகளில், மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் முயற்சிகளால் தமிழ்நாட்டில் தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்திய அளவில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவும், அவரைத் தொடர்ந்து எங்களுடைய அரசும் சுகாதாரத் துறை மூலம் சிறப்பான மருத்துவ சேவைகளை வழங்கி வருவதால் நமது மாநிலத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு விகிதம் ஒரு லட்சம் பிரசவத்திற்கு67–ஆகவும், சிசு இறப்பு விகிதம் ஆயிரம் குழந்தை பிறப்பிற்கு 16–ஆகவும் இங்கே உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். தேசிய அளவில் முறையே 122 மற்றும் 30–ஆக உள்ளதைவிட தமிழ்நாட்டில் இவ்விகிதம் மிகவும் குறைவாக உள்ளது மாண்புமிகு அம்மாவின் அரசின் சாதனையாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும் 2030–ஆம் ஆண்டுக்குள் தாய்மார்கள் இறப்பு விகிதத்தை 30–ஆக குறைப்பதே எங்களுடைய அரசின் நோக்கம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

Tamil Nadu has been gradually on the forefront in achieving the Sustainable Development Goals in Maternal Mortality Ratio (MMR) and Infant Mortality Rate (IMR).

It has also emerged as a model state to provide quality health care to its population, which is evident by the current MMR and IMR which are 67 per one lakh live births and 16 per 1000 live births respectively, which are well below the National Average of 122 and 30 respectively. We are aiming to achieve the MMR of 30 before 2030.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக ஒரு அரசு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தவேண்டும் என்பது இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நோக்கமாகவும் கொள்கையாகவும் உள்ளது. இது சம்பந்தமாக நாங்கள் ஒரு சரித்திர சாதனையை நிகழ்த்தி உள்ளோம். இன்றைக்கு தமிழகத்தில் 11 மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள், 3 ஆயிரத்து 995 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவிட மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று அந்த மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் இன்றைக்குத் துவக்கப்பட்டு வருகின்றன. அந்த விவரங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். 1.3.2020 அன்று இரண்டு மருத்துவ கல்லூரிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மட்டும் தான் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் உயர்ந்த அளவாக 18,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 53.78 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 5 ஆயிரத்து 223 கோடி ரூபாய் நிதி உதவியாக அரசால் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அண்டை மாநிலங்களும் நமது திட்டத்தைப் பின்பற்றத் தொடங்கி உள்ளன.

நமது மாநிலத்தில் பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம், ஏழை எளிய மக்கள் உயர்தர மருத்துவ சிகிச்சையை கண்டறிந்து, கட்டணமின்றி பெற முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஜனவரி 2012 முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் 1027 மருத்துவ மற்றும் சிகிச்சை முறைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதுவரை, தமிழகத்தில் 42 இலட்சம் பயனாளிகள், 6 ஆயிரத்து 740 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும் இத்திட்டத்துடன் மத்திய அரசின் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா இணைக்கப்பட்டு, ஏற்கனவே மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ரூபாய் 2 இலட்சம் வரை அனுமதிக்கப்பட்டு வந்தது. அதைத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெறுகின்றவர்களுக்கு காப்பீட்டுத் தொகை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி அரசால் வழங்கப்படுகிறது.

இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்ந்து **5** ஆண்டு காலமாக தேசிய விருதை தமிழ்நாடு அரசு பெற்றுக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு மாற்று அறுவை சிகிச்சை ஆணையத்தை நிறுவி, இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை திட்டத்தை செயல்படுத்துவதில், நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், **2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை தொடந்து ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாடு சிறந்த மாநில விருதை மத்திய அரசிடமிருந்து பெற்று வருகிறது.**

நகர்ப்புறப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம் ஆயிரத்து **634** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிறுவனம் ஆயிரத்து **388** கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியுள்ளது.

With a vision to specifically achieve the Sustainable Development Goals, I take pride in launching the Tamil Nadu Health System Reform Program. This reform programme supported by the World Bank at an estimated cost of 410 Million US dollars, roughly two thousand 857 crore rupees was possible due to the sincere efforts taken and the results achieved while implementing the Tamil Nadu Health Care Projects Phase I and Phase II by the Health Department of Government of Tamil Nadu. I appreciate the Project Team which was in place right from 2004 onwards. I also thank the World Bank for its continuous support. This 5 year Reform Program focuses on 3 key areas, namely Improved Quality of Care, Management of Non-Communicable Diseases and Injuries and Reduced equity gaps in Reproductive and Child Health.

இத்திட்டத்தின் கீழ், அனைத்து நிலைகளிலும் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு தரச்சான்றிதழ் வழங்கும் பணி மேற்கொள்ளப்படும். இதனால்

நமது மாநிலத்தில் சுகாதார வசதிகள் பெருகி, நோயாளிகளுக்கு மேலும் தரமான சிகிச்சை வழங்கப்படும்.

தேசிய அளவில் மக்களிடையே தொற்று நோய் அதிகமாக இருந்த நிலை மாறி, தற்பொழுது தொற்றா நோய் அதிகமாக உள்ளது. தமிழ்நாடு இதனை கவனத்தில் கொண்டு நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய், மனநலம் மற்றும் தலைக்காயம், ஆகியவைகளை, ஆரம்ப நிலையில் பரிசோதனை மூலம் கண்டறிந்து, சிகிச்சை மற்றும் தொடர் கவனிப்பு ஆகியவற்றை வழங்க தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் கவனம் செலுத்தும்.

அவசரம் மற்றும் தலைக்காய சிகிச்சை வழங்க, அரசு மருத்துவமனைகளில், மருத்துவமனை முன் கவனிப்பு மற்றும் மருத்துவமனைகளுக்கிடையேயான மாற்றம் ஆகிய சேவைகளை மேம்படுத்தி, 108 ஆம்புலன்ஸ் சேவை வலுப்படுத்தப்படும்.

மனநலம் பாதிக்கப்பட்டோர்களை மருத்துவமனையில் அனுமதிக்க, மீட்பு ஊர்திகளை பயன்படுத்துவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. மனநல நோயின் சுமையை குறைப்பதற்காக, தற்கொலை தடுப்பு அவசர தொலைபேசி Suicide Hotline ஒன்றை உருவாக்கி, 104 உதவி மையத்தை மேம்படுத்தப்படும்.

முன்னுரிமை தேவைப்படும் 9 மாவட்டங்களில், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் கீழ், தாய் சேய் நலம், தடுப்பூசி மற்றும் குடும்ப நலம் ஆகியவைகள், தொலைதூர கிராமங்களுக்கும் கிடைக்கும் வண்ணம் தேவையான வசதிகள் செய்து தரப்படும்.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டு மக்களுக்கு மேலும் தரமான மருத்துவ சேவையை வழங்குவதில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக தமிழ்நாடு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றைக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா வழியிலே நடைபெறுகின்ற எங்களுடைய அரசு, கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய மக்களுக்கு அங்கேயே உயர்தர சிகிச்சை அளிக்க வேண்டுமென்பதற்காக தமிழகத்திலே அதிகமான அளவு ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்திருக்கிறோம். அதேபோல,

நல்ல சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதற்காக மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, எல்லா வகையிலும் கிராமத்திலிருந்து நகரம் வரை மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிப்பதிலே முதன்மை மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தியாவில் எத்தனையோ மாநிலங்கள் இருந்தால் கூட, இன்றைக்கு மருத்துவத் துறையில் சேவை புரிவதிலே தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வருகை புரிந்திருக்கின்ற மருத்துவ நிபுணர்கள் அர்ப்பணிப்புப் உணர்வோடு நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இந்த செயல்பாடு, உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. ஏனென்று சொன்னால், எத்தனையோ துறைகள் இருக்கின்றன, எந்தத் துறையிலும், உயிரை காப்பாற்றக்கூடிய அளவிற்கு துறைகள் இல்லை. ஆனால் உயிரை காப்பாற்றக்கூடிய துறையிலே இருக்கின்ற வல்லுநர்கள், மருத்துவ நிபுணர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். நம்முடைய பணி சிறக்க, சேவை சிறக்க, அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய, புதிய நோய்கள் இப்பொழுது வந்து கொண்டிருக்கின்றன. உங்களுக்கு நன்றாகத் தெரியும், கொரோனா வைரஸ் அதற்கு மருந்தே கண்டுபிடிக்கவில்லையென்று உங்களைப் போல் இருக்கின்ற மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். அப்படிப்பட்ட வைரஸை தடுக்க உங்களுடைய திறமையால் நீங்கள் அதற்கு தமிழகத்தில் மருந்து கண்டுபிடித்து இந்த நாட்டிற்கே முன்னுதாரணமாக திகழவேண்டும் என மருத்துவர்களைக் கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

--- ---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**